# <u>அருப்புக்கோட்டை நகராட்சி</u>

## <u>நகர்மன்ற சாதாரணக்கூட்டப்பொருள்</u>

நிகழும் திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம் மார்கழி மாதம் 29ம் நாள் 2023ம் ஆண்டு 13.01.2023ம் நாள் வெள்ளி கிழமை காலை 10.15 மணியளவில் அருப்புக்கோட்டை நகர்மன்ற கூட்ட மண்டபத்தில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்ட பொருட்கள் மன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கெள்ளப்படும்

(ஓம்)திரு.சி.சுந்தரலட்சுமி

இடம்: அருப்புக்கோட்டை — நகர்மன்றத்தலைவர்

நாள்: 09.01.2023. — அருப்புக்கோட்டை நகராட்சி

பொருள்1: ஆணையாளர் அவர்களது டிசம்பர் 2022 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

பதிவு செய்யப்பட்டது

தீர்மான எண்:**349**

பதிவு செய்யப்பட்டது

பொருள்2: நகராட்சி பொறியாளர் டிசம்பர் 2022 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

பதிவு செய்யப்பட்டது

தீர்மான எண்:**350**

பதிவு செய்யப்பட்டது

பொருள்3: பிறப்பு இறப்பு விவரம் கீழ்க்கண்ட விபரப்படிக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்டவை

| டிசம்பர் 2022 | |
|---|---|
| பிறப்பு | 79 |
| இறப்பு | 64 |
| இறந்து பிறந்தவை | 0 |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

பதிவு செய்யலாம்.

தீர்மான எண்:**351**

பதிவு செய்யப்பட்டது

பொருள்4: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 36 வரையிலான வாடுகளில் 2022-2023 ம் நிதியாண்டிற்கு வரி மற்றும் வரியில்லா இனங்களை வசூல் செய்வதற்கு ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்ய (ஆட்டோ, ஒலிபெருக்கி, பேட்டரி

வாடகை கூலி உட்பட) ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. 2022-2023ம் நிதியாண்டிற்கு வசூல் பணிக்கு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. வசூல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளவருக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5393/2022/அ2

தீர்மான எண்:**352**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்5: இந்நகராட்சி நெசவாளர்காலனியில் உள்ள அங்கன்வாடி மேற்கூரை மற்றும் சுற்றுச்சுவர் பழுதடைந்தததை சரிசெய்யும் பணியானது ரூ.3.00இலட்சம் மதிப்பீட்டில் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.134 நாள் 30.06.2022ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 03.08.2022 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எம்.காசிவிஸ்வநாதன் என்பவரது ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 213 நாள்30.08.2022ன் படி ஒப்புதல் அனுமதி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணியும் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி பள்ளி கல்வி சம்பந்தப்பட்டது என்பதால் ஆணையாளர்கள் அறிவுறுத்தலின்படி மேற்படி செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளாமல் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பெரும்பாலான செலவினங்கள் வருவாய் நிதியில் மேற்கொள்ளப்படுவதால் தற்பொழுது இந்நகராட்சியின் வருவாய் நிதியில் நிலவும் பற்றாக்குறையை கருத்தில் கொண்டும், மேற்படி பணியானது பள்ளிகல்வி சம்பந்தப்பட்டது என்பதாலும் மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3621/2022/இ1

தீர்மான எண்:**353**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்6: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரவு வாகன எண். TN 67 E 7958 வாகனமானது நகர் பகுதிகளில் குப்பை அள்ளும் பணியினை தினந்தோறும் மேற்கொள்ளுவதால் டயர்கள் மற்றும் டியூப்கள் தேய்மானம் அதிகமாகவும் உள்ளது அதனால் வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்திற்கு 6 எண்ணம் டயர்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவு தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.6792/2022/எச்1

தீர்மான எண்:**354**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்7: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் பயன்பாட்டில் இருந்து வரும் வாகன எண். TN 67 BY 8520 வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுபித்து வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.250000/- ஆகும். மேற்படி வாகனமானது நகர் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகள் கொண்டு செல்வதற்கு அதிகபடியாக பயன்பாட்டில் இருந்து வருவதால் தேய்மானம் அதிகமாகவும் கூடுதலாகவும் உள்ளது. எனவே அரசு நிர்ணயிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக பராமரிப்பு செலவினங்கள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டி அத்தியாவசியமாக உள்ளது. எனவே இந்த கூடுதல் செலவீனத்திற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உரிய பின்னேற்பு பெறுவதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6423/2022/எச்1

தீர்மான எண்:**355**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்8: இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய வெளிப்பக்க கடை எண்.1க்கு மாத வாடகை அடிப்படையில் குத்தகை உரிமம் பெற்ற திரு.எஸ்.வடிவேல்முருகன் என்பவர் தனது உடல்நிலை காரணமாக கடையை தொடர்ந்து நடத்த இயலவில்லை எனக்கூறி மேற்படி கடையை நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார். எனவே மேற்படி கடையை பொது ஏலத்தில் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி கடைக்கு குத்தகை உரிமக் காலம் 01.04.2021 முதல் 31.03.2024 முடிய ஆகும். ஆனால் கடையின் உரிமதாரர் கடையை தொடர்ந்து நடத்த இயலவில்லை. எனக்கூறி கடையை நகராட்சி வசம் ஒப்படைத்துவிட்டபடியால் அன்னாரது குத்தகை உரிமத்தை ரத்து செய்து Allotment Cancellation மூலம் குத்தகை உரிமத்தை கேட்பு பட்டியலில் நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. இக்கடை மறு ஏலம் விடப்பட்டு அதனால் ஏற்படும் இழப்பிற்கும் இக்குத்தகைதாரரை பொறுப்பாக்கி அசையாசொத்துக்கள் பெயரில் வழக்குத் தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.11271/2018/அ1

தீர்மான எண்:**356**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்9: அருப்புக்கோட்டை நகராட்சியில் பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள பொலிரோ வாகன எண். TN 67 CZ 2522 ல் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/S Automative Manufacturers pvt.Ltd. கப்பலூர், மதுரை மூலம் மேற்கொள்வதற்கும், அதற்காகும் உத்தேச தொகையை குடிநீர் நிதியின் கீழ் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7294/2021/இ2

தீர்மான எண்:**357**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்10: இந்நகராட்சிக்கு சொந்தமான காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண்.5க்கு மாத வாடகை அடிப்படையில் குத்தகை உரிமம் பெற்ற திரு.அருண்குமார் என்பவர் ஜீன் 2020 முதல் மார்ச் 2023 முடிய உள்ள காலங்களுக்கான வாடகைத் தொகை ரூ.55,616/-யை செலுத்தாத காரணத்தினால் மேற்படி தொகையை செலுத்தக் கோரி பலமுறை அறிவிப்பு கடிதங்களின் வாயிலாக தெரிவிக்கப்பட்டும் தொகைசெலுத்தாத காரணத்தினால் மேற்படி கடை 19.03.2022 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேலும் அன்னார் செலுத்த வேண்டிய வாடகைத் தொகை ரூ.55,616/-ல் (வரிகள் உட்பட) ரூ.50,000/-ஐ அன்னாரது முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடுசெய்யப்பட்டது. மேலும் வருவாய் ஆய்வாளரின் குறிப்பில் மேற்படி கடை ஒரு வருட காலமாக தொடர்ந்து பூட்டப்பட்ட நிலையில் இருப்பதால் நகராட்சிக்கு ஏற்படும் வருவாயை கருத்தில் கொண்டு கடையினை நகராட்சி வசம் எடுத்து ஏல நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடையினை பொது ஏலத்தில் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி கடையின் குத்தகை உரிமதாரர் திரு.அருண்குமார் என்பவர் ஜீன் 2020 முதல் மார்ச் 2023 முடிய உள்ள காலங்களுக்கு செலுத்த வேண்டிய வாடகைத் தொகை ரூ.55,616/-(வரிகள் உட்பட) ல் ரூ.50,000/-ஐ அன்னாரது முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்யப்பட்டதற்கும் மற்றும் தொடர்ந்து மேற்படி கடைக்கு கேட்பு எழுப்பப்படாமல் இருப்பதற்கு Allotment Cancellation மூலம் குத்தகை உரிமத்தை நீக்கம் செய்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. இக்கடை மறுஏலம் விடப்பட்டு அதனால் ஏற்படும் இழப்பிற்கும் இக்குத்தகைதாரரை பொறுப்பாக்கி அசையா சொத்துக்கள் பெயரில் வழக்குத் தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5138/2018/அ1

தீர்மான எண்:**358**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்11: அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் 24 எண்ணம் A/Cக்கு ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தகாலம் முடிவடைகின்றது என இந்நகராட்சி அலுவலக கணினி உதவி திட்ட அமைப்பாளர் தெரிவித்தன் அடிப்படையில் ஓர் ஆண்டுக்கான பராமரிப்புக்காக (ஜனவரி 2023 முதல் டிசம்பர் 2023) வரை தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/-(ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவுத் தொகையை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.6890/2022/இ1

தீர்மான எண்:**359**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்12: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனமான TN 67 BY 8520 வாகனத்திற்கு பழுது பணிகள் பார்த்து தகுதிசசான்று புதுப்பித்து தருவதற்கும் மேலும் அதற்கான செலவு தொகைக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 06.12.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் நகல்களின் இணைப்புடன் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | Sri Sakthi Vinayagar Automobiles, Madurai | ரூ.220145/- |
| 2. | Sadguru Motors Automobiles Madurai | ரூ.217470/- |
| 3. | A.S.R.Body Works Madurai | ரூ.214345/- |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி அளித்த A.S.R.Body Works, Madurai ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளியை ஒப்பக்கொள்ளலாம். குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு முன்னனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6423/2022/எச்1

தீர்மான எண்:**360**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்13:அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டுவரும் கணினிகள் லேசர். பிரிண்டர்கள் UPS மற்றும் ஜெராக்ஸ் மிசின் ஆகியவற்றின் ஆண்டுபராமரிப்பு ஒப்பந்தகாலம் முடிவடைகின்றது என இந்நகரட்சி அலுவலக கணினி உதவி திட்ட அமைப்பாளர் தெரிவித்ததன் அடிப்படையில் ஓர் ஆண்டுக்கான பராமரிப்புக்காக (ஜனவரி 2023 முதல் டிசம்பர் 2023) வரை ஒப்பந்தத்திற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/-(ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) செலவுத் தொகையை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

1.மன்றம் அனுமக்கலாம்

2. நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.                    ந.க.எண்.6889/2022/இ1

தீர்மான எண்:**361**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்14: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியில் NULM 2022-23ன் கீழ் மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூ.100.00 இலட்சம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை வளாகத்தி நகர்புற வீடற்றோருக்கான தங்குமிடம் கட்டும் பணி மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20800/2021/ UPA. நாள். 13.10.2022ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 25.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.K.காமாட்சிராஜன் அருப்புக்கோட்டை | 0.001% மதிப்பீட்டு விலையைவிட குறைவாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 10% மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு</u>:-

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.001% குறைவாக கொடுத்துள்ள திரு.K.காமாட்சிராஜன், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.2220/2021/இ1

தீர்மான எண்:**362**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்15: சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021-2022 சௌண்டம்மன்கோவில் தெருவில் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் வார்டு எண். 15 மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.சி.3/145/2022 நாள்.04.04.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. தற்பொழுது நிர்வாக நலன் கருதி இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள். 11.11.2022ன்படி மேற்படி பணி ரத்து செய்யப்பட்டு வார்டு எண்.31 மீனாட்சி செட்டியார் தெருவில் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் பணி ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 02.12.2022அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரார் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 2.88% மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |
| 2. | திரு.L.தாமோதரன் அருப்புக்கோட்டை | 0.01% மதிப்பீட்டு விலையைவிட குறைவாக |

அலுவலகக்குறிப்பு:-

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட **0.01**% குறைவாக கொடுத்துள்ள திரு.L.தாமோதரன், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.5762/2022/இ1

தீர்மான எண்:**363**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்16: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான ஆரம்பபள்ளி, துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ,மாணவியர்கள் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கு தயாராவது, போட்டித்தேர்வுக்கு தயார் செய்வது, மாதிரி வினா விடைகள் வழங்குவது மேலும் மாணவர்களின் வாசிப்பு

திறனை மேம்படுத்தும் விதமாக மாணவர்களின் நலன் கருதி தினசரி நாளிதழ் (தினகரன்) வாங்குவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகையை கல்வி நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3622/2022/இ2

தீர்மான எண்:**364**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்17:அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவின் பயன்பாட்டில் இருந்து வரும் வாகன எண். TN 67 BY 8537 வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பித்து வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.285000/-ஆகும். மேற்படி வாகனமானது இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை FC எடுப்பதினால் நகர் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகள் கொண்டு செல்வதற்கு அதிகபடியாக பயன்பாட்டில் இருந்து வருவதால் தேய்மானம் அதிகமாகவும் கூடுதலாகவும் உள்ளது. எனவே அரசு நிர்ணயிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக பராமரிப்பு செலவினங்கள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டி அத்தியாவசியமாக உள்ளது. எனவே இந்த கூடுதல் செலவீனத்திற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உரிய பின்னேற்பு பெறுவதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6441/2022/எச்1

தீர்மான எண்:**365**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்18:அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசுமருத்துவமனை வளாகத்தில் நகர்புற வீடற்றோருக்கான தங்குமிடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழில் விளம்பரம் செய்தவகையில் விளம்பரக்கட்டணம் ரூ.51206/-ஐ Bright Advestising, Chennai. நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2220/2022/இ1

தீர்மான எண்:**366**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்19:அருப்புக்கோட்டை நகராட்சியில் பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள ஸ்கார்பியோ வாகன எண்.TN67 CZ 2538 க்கு இரண்டாவது சர்வீஸ் பணியினை மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/S Automative Manufacturers pvt.Ltd, கப்பலூர். மதுரை மூலம் மேற்கொள்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவீனத் தொகையை வருவாய் நிதியின் கீழ் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.0089/2021/இ2

தீர்மான எண்:**367**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்20: அருப்புக்கோட்டை நகராட்சி பகுதியில் பாதாளச்சாக்கடைத்திட்டம் செயல்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்டுள்ள Main Pumping Station, Sub Pumping station, STP மற்றும் Lift stations-15 இடங்களுக்கு உரிய நகர்மன்ற அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்யுமாறு செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், பாதாளசாக்கடை பிரிவு, அருப்புக்கோட்டை அவர்களின் கடித எண்.8922/F.APKUGSS/DO/2022 நாள்08.09.2022ன் படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.235 நாள்.21.09.2022ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கீழ்காணும் இடங்கள் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், பாதாளசாக்கடை பிரிவு, இராஜபாளையம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

| Sl. No. | Desciption | Location | S.F. No. | Land Area Required |
|---|---|---|---|---|
| 1. | Sub pumping Station-I | Municipal Boundary | 27 | 15-20 cents |
| 2. | Sub pumping Station-II | Anbu Nagar | 3/15 | 15-20 cents |
| 3. | Main Pumping Station-III | Municipality Burial Ground | 1/1 | 15-20 cents |
| 4. | Sub Pumping Station /*-IV | Devatex within the Municipal Boundarty | 9/52 | 15-20cents |
| 5. | STP | Compost yard in Sukilanatham panchayat | 426/4 | 3 Acre |
| 6. | Lift Stations – 15 nos | - | - | 2 cents each |

மேற்படி இடங்களில் சில இடங்களுக்கு பொது மக்களிடமிருந்து ஆட்சேபனை வரப்பெற்றதால் நகர்மன்றத் தலைவர், நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் Executive Engineer and TWAD Officials, P.F.Division, Tirunelveli அவர்களுடன் கலந்தாலோசனைக்கூட்டம் மற்றும் ஆய்வு மேற்கொண்டதில் தேர்வு செய்யப்பட்ட கீழ்கண்ட இடங்களுக்கு உரிய நகர்மன்ற அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்யுமாறு Excustive Engineers, TWAD Board, P.F.Division, Tirunelveli அவர்களின் Lr.No.02122/ F.Aruppukottai UGSS/JDO2/2023/ Dt:02.01.2023ன்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி கீழ்காணும் இடங்களை பாதாளசாக்கடை பணிகளுக்காக தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl. No. | Component | Location of land | Nature of land | Area Required |
|---|---|---|---|---|
| 1. | MPS | Municipal office near | Municipal land | 45 M X 45 M |
| 2. | SPS-1 | Muniappan kovil street,M.Puliyampatti | Municipal land | 30 M X 30 M |
| 3. | LS | Anbu Nagar 2nd Street | Municipal land | 15 M X 15 M |
| 4. | LS | Jayaganthan Nagar Near Toilet | Municipal land | 15 M X 15 M |
| 5. | LS | Nehru Nagar | Municipal land | 15 M X 15 M |
| 6. | LS | Bharathi Nagar | Municipal land | 10 M X 20 M |
| 7. | LS | Asis Nagar 1st street | Municipal land | 10 M X 20 M |
| 8. | LS | Railway feeder Road (Hari Ram Saw mill opposite) | Municipal land | 10 M X 20 M |
| 9. | LS | Deva Tex (With in the municipal boundary) | Municipal land | 10 M X 20 M |
| 10. | SPS-2 | Municipality Burial Ground | Municipal land | 30 M X 30 M |
| 11. | STP | Compost yard in Sukilanatham Panchayat | Municipal land | 3Acre |

**அலுவலகக் குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.7476/2017/இ1

தீர்மான எண்:**368**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்21: அருப்புக்கோட்டை நகராட்சி உச்சிசாமி கோவில் 6வது குறுக்குத்தெருவில் விசைத்தறி கூடம் நடத்தக்கூடாது என திருமதி.நவமணி என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண் WP(MD) No.9299/2019ல் நகராட்சி ஆணையாளரை 1ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்குதொடர்ந்துள்ளார் மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக திரு.என்.திலிப்குமார், வழக்கறிஞர் அவர்கள் வழக்கில் ஆஜராவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.7176/2022/எப்1

தீர்மான எண்:**369**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்22: நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.5094/2022/டி.பி.2 நாள் 12.12.2022ன்படி அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பூங்கா விளையாட்டுதிடல் மற்றும் திறந்தவெளி ஆகியவற்றின் சொத்து விபரப்பட்டியல் மற்றும்

வரைபடங்கள் தயார் செய்து அரசின் ஒப்புதல் பெற்று அரசிதழில் வெளியிடுவதற்கு ஏதுவாக மேற்கண்ட விபரங்களை பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்துள்ளதையும், மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்ட சொத்து பதிவேட்டில் பூங்கா, விளையாட்டுதிடல் மற்றும் திறந்தவெளி ஆகியவற்றின் விபரங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதையும் ஒப்பிட்டு சான்று வழங்குவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அலுவலகம் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்திற்கு நேரில் சென்று ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி வரைபடங்கள் தயார் செய்ய ஆகும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.7083/2022/எப்1

தீர்மான எண்:**370**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்23: அருப்புக்கோட்டை நரகாட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை ஆற்றல் மிகுந்த LEDயாக பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 1007, நாள் 31.08.2020ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வீணா என்டர்பிரைசஸ் நிறுவனம் வாங்கிய குறைந்த ஒப்பந்தப்புள்ளியானது ஏற்கப்பட்டு தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டது. தற்பொழுது மேற்படி நிறுவனத்தாருக்கு தெருவிளக்கு பராமரிப்பு பணி ஒரு வருடத்திற்கு மேற்கொள்வதற்கான காலம் 31.12.2022 உடன் முடிவடைகிறது.

தற்போது நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து தெருவிளக்குகள் LEDயாக Conversion செய்யும் பணிக்கான ஒப்பந்துபுள்ளி 28.12.2022 அன்று பெறப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது. ஆனால் இந்நகாட்சி பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் உடன் மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே ஏற்கனவே தெருவிளக்கு பராமரிப்பு பணி பார்த்து வரும் வீணா எண்டர்பிரைசஸ் நிறுவனத்தார் ஏற்கனவே அனுமதிக்கப்ட்ட விலைவிகிதத்தில் மூன்றாம் ஆண்டுக்கான 5% கூடுதல் விலை விகிதத்தினை சேர்த்து வரும் விலை விகிதத்திற்கு பணிகள் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளதின்படி மேற்படி நிறுவனத்தாருக்கு 01.01.2023 முதல் 31.03.20223 வரை மூன்று மாதங்களுக்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.3613/2020/இ2

தீர்மான எண்:**371**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்24: அருப்புக்கோட்டை நரகாட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் தனியார்மயம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள விதிக்கப்பட்ட அரசாணையின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/2016/ஜே2, நாள் 26.10.2017ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s.Malar Clean and Green PVT LTD., தனியார் நிறுவனத்தின் மூலம் 10 பணியாளரை கொண்டு மேற்படி பள்ளிகளுக்கு சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தது. மேற்படி தனியார் நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற அனுமதி எண் 204, நாள் 30.08.2022ன்படி இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.9624/2017/எச்1, நாள் 30.08.2022 மூலம் 01.08.2022 முதல் 31.10.2022 முடிய மேற்படி சுகாதார பணிகளை மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவு 31.10.2022 உடன் முடிவடைய உள்ளதாலும் மேலும் M/s.malar Clean and Green PVT LTD., தனியார் நிறுவனம் பள்ளிசுகாதாரப்பணியினை தானே பார்த்து வர விருப்பம் தெரிவித்துள்ளது. தற்பொழுது கொரோனா நோய் பரவிவரும் சூழ்நிலையில் பள்ளி மாணவர்களின் சுகாதாரம் மற்றும் அத்தியவசியத்தினை கருதி 10 துய்மை பணியாளர்களை கொண்டு 2021-2022 ஆண்டு தினசரி ஊதிய விலைவிகிதத்தில் 01.11.2022 முதல் 31.01.2023 முடிய மூன்று மாதத்திற்கு ஒரு முறை புதுப்பித்து வழங்கவும் அதற்குரிய செலவுத்தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணிகாலம் 31.10.2022ம் தேதியுடன் முடிவடைந்தது. தற்சமயம் 01.11.2022 முதல் பார்த்து வரும் பணிக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9624/2015/எச்1

தீர்மான எண்:**372**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்25: அருப்புக்கோட்டை நரகாட்சி பகுதியில் பாதாளசாக்கடைத்திட்டம் செயல்படுத்தும் பொருட்டு கீழ்கண்டுள்ள 1. . Number of Domestic House Service Conections, 2. Number of Commercial Service Connections, 3. Number of Industrial Service Connections, 4. Assesment List ஆகிய விபரங்கள் வழங்குமாறு செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திட்ட உருவாக்கம் பிரிவு, திருநெல்வேலி அவர்களின் கடித எண் 02123/F.Aruppukottai UGSS/JDO 2/2022 நாள் 02.01.2023ன் படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், திட்ட உருவாக்கம் பிரிவு, திருநெல்வேலி அவர்களிடம் பாதாளசாக்கடை பணிகளுக்காக கீழ்கண்ட பட்டியலின்படி விபரம் வழங்குவதற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகறிது.

| DOMESTIC – NON DOMESTIC REPORT (WATER SUPPLY) | | |
|---|---|---|
| **SI.No.** | **USAGE TYPE** | **NO OF ASST** |
| 1. | Domestic | 15713 |
| 2. | Non Domestic | 223 |
| 3. | Industrial | 167 |
| | **Total** | **16103** |

| DOMESTIC – NON DOMESTIC REPORT (PROPERTY TAX) | | |
|---|---|---|
| **SI.No.** | **USAGE TYPE** | **NO OF ASST** |
| 1. | Residential | 31761 |
| 2. | Commercial | 5190 |
| 3. | Industrial | 537 |
| 4. | EDU. Institution | 9 |
| | **Total** | **37497** |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.7476/2017/இ1

தீர்மான எண்:**373**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்26: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி வருவாய் நிதி 2022-2023 ன் கீழ் ஆயிரம்கண் மாரியம்மன் கோவில் தெற்கு விரிவாக்குப்பகுதியில் உள்ள (லீலாவதி நகர்) 5 தெருக்களில் கிராவல் மண் பரப்பும் பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.3.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தம் 25.08.2022 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.N.காத்தூன்பீவி<br>அருப்புக்கோட்டை | 0.04% மதிப்பீட்டு<br>தொகையை விட குறைவாக |
| 2. | திரு.N.எர்ஷாத்கான்<br>அருப்புக்கோட்டை | 1.91% மதிப்பீட்டு<br>தொகையை விட அதிகமாக |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.04% குறைவாக கொடுத்துள்ள திரு.M.N.காத்தூன்பீவி, அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.4235/2022/இ1

தீர்மான எண்:**374**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்27: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி வருவாய் நிதி 2022-2023 ன் கீழ் நாகலிங்க நகர் பகுதியில் (காமராஜர் தெரு மற்றும் நட்டார் தெரு) உள்ள தெருக்களில் கிராவல் மண் பரப்பும் பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தம் 25.08.2022 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.N.காத்தூன்பீவி அருப்புக்கோட்டை | 2.62% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 0.21% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட **0.21**% குறைவாக கொடுத்துள்ள திரு.N.எர்ஷாத்கான், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.4234/2022/இ1

தீர்மான எண்:**375**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்28: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு நகர் பகுதியில் மொத்தம் 6 எண்ணம் நுண்ணுயிர் கலவை உரக்கிடங்கு செயல்பட்டு வருகிறது. மேற்படி கலவை உர கிடங்கில் குப்பைகளை மக்கச்செய்ய EMI Solution தேவையான திரவம் அலுவலக இருப்பில் குறைவாக உள்ளதால் உடனடியாக கொள்முதல் செய்வதற்கும் மற்றும் அதற்குண்டான உத்தேச செலவு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.026/2023/எச்1

தீர்மான எண்:**376**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்29: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு, தற்போது மழைகாலமாக இருப்பதினால் பொது மக்களிடம் நோய் பரவலை கட்டுப்படுத்தும் நோக்குடனும் மழைகாலத்தில் தேங்கி நிற்கும் மழைநீர் மற்றும் தேவையற்ற பொருட்களிலிருந்து உற்பத்தியாகும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த ஏதுவாக வெளிபுற மருந்து அடிக்கம் இயந்திரம் (Outdoor Fogging Machine) தற்பொழுது ஓரிரு பிரிவுகல் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே பிரிவுக்கு 1 எண்ணம் வீதம் 6 பிரிவுக்கு 6 எண்ணம் (Outdoor Fogging Machine) உடனடியாக கொள்முதல் செய்வதற்கும் மற்றும் அதற்குண்டான உத்தேச செலவு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.27/2023/எச்1

தீர்மான எண்:**377**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்30: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனமான TN 67E7958 வாகனத்திற்கு டயர்கள் கொள்முதல் செய்வதற்கும் மேலும் அதற்காகும் செலவு தொகைக்கு இந்நகர்மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 02.12.2022 அன்று விலைபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் நகல்களின் இணைப்புடன் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | செந்துரான் டயர்ஸ் திருச்சுழி ரோடு அருப்புக்கோட்டை | ரூ.77620/- |
| 2. | கோகுல் டயர்ஸ் 181(டி) 4 மதுரை ரோடு அருப்புக்கோட்டை | ரூ.76052/- |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி கோகுல் டயர்ஸ், அருப்புக்கோட்டை அவர்களின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம் குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்தரவிற்கு முன்அனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6792/2022/எச்1

தீர்மான எண்:**378**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்31: நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.எண்.28369/ஜெ3/2018, நாள் 04.12.2018ன் மூலம் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தனியார் மயம் மூலம் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அதன்பேரில் இந்நகராட்சி நிதிநிலையினை கருத்தில் கொண்டு 120 தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் மயம் மூலம் நியமனம் செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அனுமதி கால அளவு 03.12.2021 அன்று முடிவு பெற்றதால் இந்நகராட்சியில் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அறிவுறுத்தலின்படியும் 04.12.2021 முதல் 03.12.2022 முடிய ஒருவருட காலத்திற்கு நகர்மன்ற தீர்மான எண் 111, நாள் 30.06.2022 மூலம் தற்காலிகமாக கால நீட்டிப்புக்கான அனுமதி பெற்று ஏற்கனவே தூய்மை பணி பார்த்து வந்த M/s.Malar Clean and Green PVT LTD., நிறுவனத்திற்கு அதே ஊதியத்தில் தூய்மை பணியினை மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி உத்தரவு வாங்கப்பட்டதனை ஏற்று பின்னேற்பு வழங்க கோரியும் மற்றும் 04.12.2021 முதல் மேலும் முன்றாண்டு காலத்திற்கு தனியார் மயம் மூலம் தூய்மை பணியினை மேற்கொள்ள காலநீட்டிப்பு வழங்க கோரியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மயம் மூலம் தூய்மை பணியினை மேற்கொள்வதற்கான அனுமதி இதுநாள் வரையிலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களிடமிருந்து பெறப்பிடவில்லை. தற்போது அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சர் அவர்களது தொகுதியில் பொது சுகாதார பணிகள் தொய்வின்றி நடைபெற அமைச்சர் அவர்களின் முகவரியிட்ட கடித கற்றையில் தெரிவித்துள்ளபடி சுகாதார பணிகள் மேற்கொள்ள பொது சுகாதார அவசர அவசியம் கருதி 04.12.2022 முதல் 03.03.2023 முடிய மேலும் மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மயம் மூலம் அதே ஊதியத்தில் தூய்மை பணிகளை மேற்கொள்ளவும், மேலும் 04.12.2022 முதல் M/s.Malar Clean and Green Pvt Ltd., நிறுவனம் மூலம் தூய்மை பணியினை மேற்கொண்டு வருவதையும் ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 01.12.2022ஆம் தேதிய சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் நகர்நல அலுவலர் ஆகியோர்களது அறிக்கையில் தெரிவித்துள்ளதன்படி அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சர் அவர்களின் தொகுதியில் பொது சுகாதார பணிகள் தொய்வின்றி நடைபெற பொது சுகாதார அவசர அவசியம் கருதி

04.12.2022 முதல் மூன்று மாத காலத்திற்கு அதே ஊதியத்தில் M/s.Malar Clean and Green Pvt Ltd., நிறுவனத்தி மூலம் தூய்மை பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.11734/2015/எச்1

தீர்மான எண்:**379**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்32: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 36 வரையிலான வார்டுகளில் 2022-2023ம் நிதியாண்டிற்கு வரி மற்றும் வரில்லா இனங்களை வசூல் செய்வதற்கு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | சாமுண்டி எலக்ட்ரிக்கல்ஸ் | ரூ.2400/- |
| 2. | வீரேஸ்வரி எலக்ட்ரிக் ஒர்க்ஸ் | ரூ.2500/- |

மேலே வரப்பெற்று இரண்டு விலைப்புள்ளிகளில் சாமுண்டி எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் குறைவான விலைப்புள்ளியான நாள் ஒன்றுக்கு ரூ.2400/-யை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்காலம்
2. வசூல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள சாமுண்டி எலக்ட்ரிக்கல்ஸ், அருப்புக்கோட்டை அவர்களுக்கு அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5393/2022/அ2

தீர்மான எண்:**380**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்33: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4ல் நெசவாளர் காலனி 1வது தெருவில் புதியதாக கட்டப்பட்டு வரும் அறிவுசார் மைய கட்டிடத்தின் மேல் செல்லும் 33KV உயர் அழுத்த மின்கம்பத்தினை இடமாற்றம் செய்யக்கோரி நகராட்சியில் ஆணையாளர் அவர்களால் 08.08.2022 அன்று உதவிசெயற் பொறியாளர், தமிநாடு மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி உயர் அழுத்த மின்தடத்தினை மாற்றுவதற்கு தேவையான மின்சாதனங்கள் தற்போது கைவசம் இல்லை எனவும் மின்கம்பத்தினை இடமாற்றம் செய்தவற்கான மின்சாதனங்களை நகராட்சி நிர்வாகமே வாங்கி கொள்ளுமாறும் அத்தொகையினை நகராட்சியில் இருந்து தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின்கட்டணத்தில் ஈடு செய்து தரப்படும் என அறிவுறுத்தி மேற்பாவை

பொறியாளர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், விருதுநகர் அவர்களின் 09.01.2023ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே திட்ட பணியின் அவசர அவசியம் கருதி மின்கம்பத்தினை மாற்றம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவீனத்தொகை ரூ.2.75 இலட்சத்தினை வருவாய் நிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்ட பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.1755/2012/இ2

தீர்மான எண்:**381**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்34: 2022-2023ம் நிதியாண்டிற்கு தேவையான கணினி ரசீதுகள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் மற்றும் A4 சைஸ் பேப்பர் பண்டல் Legal சைஸ் பேப்பர் பண்டல்கள் மேலும் அம்மா உணவகங்களின் டோக்கன்கள் இதர நோட்புக் இனங்கள் இந்நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான ஸ்டேசனரி பொருட்கள் ஆகியவற்றை The Thoothukudi District HI-TECH PRINTING IND. NO.TUTI-5, Kovilpatti அச்சகத்திலிருந்து வாங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு செலவுகள் செய்ய நகர்மன்ற தீர்மானத்தின்படி மன்ற அனுமதி 21.09.2022ல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது அனைத்து வார்டுகளுக்கு வார்டு சபா கூட்டத்திற்கு நோட்டுகள் மற்றும் ஆடு அறுக்கும் கட்டண டோக்கன், மிதிவண்டி கட்டண டோக்கன், பஸ்டாண்டு வசூல் கட்டண டோக்கன்கள் மற்றும் வரி கணினி ரசீதுகள் அச்சிடப்பட்டுள்ளதால் மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்ட தொகைக்கு மேல் கூடுதலாக ஆகும் செலவின தொகைக்கும் பெறப்பட்ட பட்டியல் தொகைக்கான செலவீனத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.4546/2022/பி4

தீர்மான எண்:**382**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்35: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் பகிர்மான பிரதான குழாய் மற்றும் திருப்புவனம் தலைமை நீரேற்று நிலையம் முதல் அருப்புக்கோட்டை நகராட்சி எல்லை வரை உள்ள உந்து குழாய் மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள வால்வுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.60 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.224/2022/இ1

தீர்மான எண்:**383**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்36: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் அமைந்துள்ள அடிகுழாய்களை பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பொருட்டு இருப்பில் இல்லாத மற்றும் இருப்பில் குறைவாக உள்ள அடிபம்பு உதிரிபாகங்களை கொள்முதல் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.233/2022/இ1

தீர்மான எண்:**384**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்37: 2022-2023ஆம் நிதியாண்டிற்கான விருதுநகர் மாவட்டம் – 207 அருப்புக்கோட்டை சட்டமன்றம், அருப்புக்கோட்டை நரகாட்சிக்குட்பட்ட மொத்தம் 36 வார்டுகளில் உள்ள வாக்காளர்கள் எவரும் விடுபடாமல் அனைவரும் 100 சதவீதம், பாகம் எண் 51 முதல் 133 வரை உள்ள பாகங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சுருக்க திருத்தம் 2023 மூலம் வரபெற்ற (படிவம் 6, 6B, 7, மற்றும் 8) படிவங்களில் உள்ள போட்டோ மற்றும் இணைப்புகள் ஸ்கேனிங் செய்தல் மற்றும தேர்தல் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்தல் (Data Entry) மற்றும் சட்டமன்ற தேர்தல் தொடர்பான இதர பணிகள் போன்றவற்றிற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.7206/2020/சி3

தீர்மான எண்:**385**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்38: அருப்புக்கோட்டை நகராட்சியில் பொறியில் பிரிவிற்கு சொந்தமான 3 (எண்ணம்) பவர்டில்லர் மற்றும் MDR 3592, MDR4259, MDR4410, MDR 4478 வாகனங்கள் வாங்கப்பட்டு 40 வருடங்களுகககு மேலாகிவிட்டது. மேற்படி வாகனங்கள் பயன்பாடற்று சிதலடைந்த நிலையில் உள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 08.08.2022ம் தேதிய கடிதத்தில் நகராட்சியில் பயன்பாடற்ற நிலையில் உள்ள வாகனங்களை கழிவு செய்து ஏலம் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்கண்ட வாகனங்களை கழிவு செய்து ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4596/2020/இ2

தீர்மான எண்:**386**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்39: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி வருவாய் நிதி 2022-2023 ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22 பூலூரம்மன் கோவில் தெருவில் ஒரு பக்கத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கான (பூலூரம்மன் கோவில் முதல் ஜவஹர் சங்கம் சந்திப்பு வரை) மதிப்பீட்டுத்தொகை ரூ.1.60 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தம் 05.01.2023 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.L.தாமோதரன்<br>அருப்புக்கோட்டை | 0.78% மதிப்பீட்டு<br>தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன்<br>அருப்புக்கோட்டை | 0.04% மதிப்பீட்டு<br>தொகையைவிட குறைவாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட **0.04**% குறைவாக கொடுத்துள்ள திரு.M.காசிவிஸ்வநாதன், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.6027/2022/இ1

தீர்மான எண்:**387**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்40: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி வருவாய் நிதி 2022-2023 ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட சுக்கிலநத்தம் உரக்கிடங்கின் முன்புறம் உள்ள கலவை உரக்கிடங்கு (Compost Yard)ல் தடுப்பு சுவர் அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தம் 05.01.2023 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.L.தாமோதரன்<br>அருப்புக்கோட்டை | 7.31% மதிப்பீட்டு<br>தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன் | 0.01% மதிப்பீட்டு |

அருப்புக்கோட்டை தொகையைவிட குறைவாக

**அலுவலகக்குறிப்பு:-**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.01% குறைவாக கொடுத்துள்ள திரு.M.காசிவிஸ்வநாதன், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5736/2022/இ1

தீர்மான எண்:388

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்41: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி வருவாய் நிதி 2022-2023 ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 முதல் 36 வரை உள்ள அடிகுழாய்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தம் 05.01.2023 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.S.சங்கரன் அருப்புக்கோட்டை | 0.03% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திரு.A.P.மோகன்குமார் அருப்புக்கோட்டை | 11.52% மதிப்பீட்டு தொகையைவிட அதிகமாக |

**அலுவலகக்குறிப்பு:-**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.03% குறைவாக கொடுத்துள்ள திரு.S.சங்கரன், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5735/2022/இ1

தீர்மான எண்:389

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்42:அருப்புக்கோட்டை நகராட்சியில் வருவாய் நிதி 2022-2023 ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் உள்ள பழுதடைந்த பாலங்களை இடித்துவிட்டு சிறுபாலங்கள் அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.9.60 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தம் 05.01.2023 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.L.தாமோதரன் அருப்புக்கோட்டை | 2.62% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 0.03% மதிப்பீட்டு தொகையைவிட குறைவாக |

**அலுவலகக்குறிப்பு:-**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட **0.03**% குறைவாக கொடுத்துள்ள திரு.M.காசிவிஸ்வநாதன், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.6025/2022/இ1

தீர்மான எண்:**390**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்43: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியில் வருவாய் நிதி 2022-2023 ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் உள்ள பழுதடைந்த பாலங்களை இடித்துவிட்டு சிறுபாலங்கள் அமைக்கும பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.9.10 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தம் 05.01.2023 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.L.தாமோதரன் அருப்புக்கோட்டை | 2.25% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 0.02% மதிப்பீட்டு தொகையைவிட குறைவாக |

**அலுவலகக்குறிப்பு:-**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட **0.02**% குறைவாக கொடுத்துள்ள திரு.M.காசிவிஸ்வநாதன், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.6026/2022/இ1

தீர்மான எண்:**391**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்44: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியில் வருவாய் நிதி 2022-2023 ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டுவரும் கணினிகள், லேசர் பிரிண்டர்கள், UPS மற்றும் ஜெராக்ஸ் மிசின் ஆகியவற்றிற்கு ஆண்டு பராமரிப்பு

பணி மேற்கொள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தம் 05.01.2023 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Genuine Computers Sivakasi | 4.65% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | M/s.Victory System Service Sivakasi | மதிப்பீட்டு தொகைக்கே |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு தொகைக்கே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Victory System Service, Sivakasi அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.6889/2022/இ1

தீர்மான எண்:**392**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்45: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி வருவாய் நிதி 2022-2023 ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் 24 எண்ணம் A/C க்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தம் 05.01.2023 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | J.D.Refrigiretion & Air Conditioner Aruppukottai | 0.32% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | Arctic Air Cooling System., Aruppukottai | மதிப்பீட்டு தொகைக்கே |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு தொகைக்கே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Arctic Air Cooling System, Aruppukottai அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.6890/2022/இ1

தீர்மான எண்:**393**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்46: விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி கல்வி நிதி நிதி 2022-2023 ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி பராமரிப்பில் உள்ள நெசவாளர் காலனி உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பள்ளிக்கட்டிடத்தில் கழிவறை பழுதுகள், குளியலறை கதவுகள், சிறுநீர் கழிவறையில் தண்ணீர் குழாய் பழுதுகள், கதவுகள் மற்றும் பழுதடைந்துள்ள கோப்பைகள் (Water Closer) மாற்றி பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தம் 05.01.2023 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.L.தாமோதரன்<br>அருப்புக்கோட்டை | 4.75% மதிப்பீட்டு<br>தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன்<br>அருப்புக்கோட்டை | 0.14% மதிப்பீட்டு<br>தொகையைவிட குறைவாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட **0.14%** குறைவாக கொடுத்துள்ள திரு.M.காசிவிஸ்வநாதன், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5206/2022/இ1

தீர்மான எண்:**394**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்47: அருப்புக்கோட்டை நகராட்சியில் SBM (Urban 2.0)ன் கீழ் சுக்கிலநத்தம் உரக்கிடங்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி பழைய குப்பைகளை (Legacy Waste) Bio Mining முறையில் தீர்வு செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 4வது மாநியக்குழு (State High Powered Committee Meeting) நாள் 09.11.2022 ன் படி (மத்திய அரசு பங்குத்தொகை ரூ.90.00 இலட்சம் (50%) + மாநில பங்குத்தொகை ரூ.59.40 இலட்சம் (33%) + நகராட்சி பங்குத்தொகை ரூ.30.60 இலட்சம்(17%)) மதிப்பீடுத்தொகை ரூ.180.00 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | அருப்புக்கோட்டை நகராட்சி சுக்கிலநத்தம் உரக்கிடங்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி பழைய குப்பைகளை (Legacy Waste) Bio Mining முறையில் | **180.00** |

| | தீர்வு செய்யும் பணி | |
|---|---|---|

மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களிடம் உரிய நிர்வாக அனுமதி பெற திட்டப்பிரேரணை அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலவலகக்குறிப்பு:-**

1. பார்வையிட்டு பதிவுசெய்யலாம்..
2. மேற்படி திட்டப்பணிகள் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று திட்டப்பிரேரணை அனுப்பியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத்தொகை (Grand) போக மீதமுள்ள நகராட்சிப்பங்குத்தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3279/2022/இ1

தீர்மான எண்:**395**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்48: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 11 மணிநகரம் ஓடை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கழிப்பறை அருகில் (குலாளர் தெரு முதல் மேட்டு தெரு வரை) சாலை வசதிகள் செய்துதருமாறு பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும் மேற்படி பகுதியில் சாலை வசதி மேற்கொள்வதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.3.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.291/2023/இ1

தீர்மான எண்:**396**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்49: இந்நகராட்சி பொது சுகாதார TN 67 BY 8537 வாகனத்திற்கு பழுது பணிகள் பார்த்து தகுதி சான்று புதுப்பித்து தர ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 10.01.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | Shree Manoj Automobiles Aruppukottai | ரூ.283500/- |
| 2. | Shree Balamurugan Automobiles Aruppukottai | ரூ.288500/- |

**அலுவலகக்குறிப்பு:-**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி ரூ.283500/- அளித்த Shree Manoj Automobiles. Aruppukottai ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.6441/2022/எச்1

தீர்மான எண்:**397**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்50:அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 31 தெற்கு தெரு விரிவாக்கப்பகுதியில் குடிநீர் குழாய் PVC Pipe களை DI Pipe களாக மாற்றித்தருமாறு நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும் மேற்படி பகுதியில் குடிநீர் குழாய் PVC Pipe களை DI Pipe களாக மாற்றும் பணிக்கு உத்தேச செலவினத்தொகை ரூ.7.20 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.294/2023/இ1

தீர்மான எண்:**398**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்51: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 25 உள்ள நேருநகர் பகுதியில் அமைந்துள்ள நியாயவிலைக்கடைக்கு அடிப்படைவசதிகள் செய்துதருமாறு நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும் மேற்படி நேருநகர் நியாயவிலைக்கடையில் குடிநீர் வசதி மற்றும் கழிப்பிடவசதி மேற்கொள்வதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.3.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.292/2023/இ1

தீர்மான எண்:**399**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்52: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 11 மணிநகரம் ஓடை தெருவில் (குலாளர் தெரு முதல் மணிநகரம் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கழிப்பறை வரை) சாலை வசதிகள் செய்துதருமாறு பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி தெருவில் சாலை பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.4.80 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.293/2023/இ1

தீர்மான எண்:**400**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஓம்) திருமதி.சி.சுந்தரலட்சுமி
நகர்மன்ற தலைவர்
அருப்புக்கோட்டை நகராட்சி

ஆணையாளர்
அருப்புக்கோட்டை நகராட்சி